OPEN ACCESS

Manuscript ID:
TAM-08022023-6656

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.07.2023

Accepted: 15.09.2023

Published: 01.10.2023

Citation:
Vijayakumar, B. "The Ethnic People of Assam: A Study of Their Historical Background and Multicultural Features." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 2, 2023, pp. 26–33.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6656

*Corresponding Author:
vijayakumar.ciil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Ethnic People of Assam: A Study of their Historical Background and Multicultural Features

**Dr. B. Vijayakumar**
*Assistant Professor, Department of Modern Indian Languages and Literary Studies*
*Gauhati University, Guwahati, Assam*
*https://orcid.org/0000-0002-9915-192X*

## Abstract
Culture is all about people. Culture includes a group's history, tendencies, characteristics, knowledge lineages, ways of life, social structure, language, food, music, and beliefs. The culture of any particular society cannot develop overnight. It is very difficult to pinpoint the exact date of its origin. It takes hundreds of years for a culture to establish itself. The word culture is derived from the Latin word 'cultura'. Understanding culture is like trying to understand people and their varied perspective towards life. When we examine the historical evolution of Assamese culture, we can see that the rich culture of Assam has many elements and a long history across centuries of migration and settlement. To acquire knowledge about Assamese culture it is necessary to first study its history. How did Assam become home to various ethnic groups originating from south and Southeast Asia? How did the amalgamation of various ethnic group cultures inhabit the state of Assam result in the formation of a composite culture in the region? This article explains the historical background of the ethnic groups living in Assam, one of the north-eastern states of India, and their multi-cultural features.

**Key Words:** History of Assam People, Ethnic Groups of Assam, Multi-Culturalism.

## References
1. Choudhury R.D, Some Aspects of History and Culture of Assam, Publication Board of Assam, 2012.
2. Das S T., Tribal of North Eastern India: Habit, Economy, Customs, Traditions, Gian Publishing House, Delhi, 1986.
3. Dutta P N, The Glimpse into History of Assam, Bina Library Publication, Guwahati, 2006.
4. Edward Gait, A history of Assam, EPH Publishers, Guwahati, 2018.
5. Jawahar Jyoti Kuli, Misong Sanskriti, Hasturba Prakashan, Dibrugargh, 2003.
6. Papeen Narrji, Boro-Kaccarir Hamaj Aru Sanskriti, Meena Library Publication, Guwahati 2001.
7. Upen Rabha Hakacham, Rabha Loka Sanskrti, Publication Board of Assam, 2001.
8. Waddell L. A., The Tribes of the Brahmaputra Valley, Sanskaran Prakashak, Delhi, 1975.

# அசாம் மாநில இனக்குழுக்களின் வரலாற்றுப் பின்னணி மற்றும் பன்முகக் கலாச்சார அம்சங்கள் குறித்த ஓர் ஆய்வு

*முனைவர் பா. விஜயகுமார்*
உதவிப் பேராசிரியர்
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயிலாய்வுத்துறை
குவகாத்திப் பல்கலைக் கழகம், குவகாத்தி, அசாம்

**ஆய்வுச் சுருக்கம்**

*கலாச்சாரம் என்பது மக்களைப் பற்றியது. கலாச்சாரம் என்பதற்குள் ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், அறிவு பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு, மொழி, உணவு, இசை, நம்பிக்கைகள் என்பனவும் உள்ளடங்கும். எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரமும் ஒரே நாளில் உருவாகிவிட முடியாது. அது எப்போது உருவானது என்பதற்கான சரியான தேதியைக் குறிப்பிடுவது மிகவும் கடினம். ஒரு கலாச்சாரம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகும். கலாச்சாரம் என்ற சொல் லத்தீன் வார்த்தையான 'Cultura' என்பதிலிருந்து பெறப்பட்டது. கலாச்சாரத்தைப் புரிந்து கொள்வது என்பது மக்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வதற்குச் சமம். அசாமிய கலாச்சாரத்தின் வரலாற்று பரிணாமத்தை ஆராயும் போது, அசாமின் வளமான கலாச்சாரம் பல கூறுகளையும் நெடிய வரலாற்றையும் கொண்டதாக உள்ளதை அறிய முடிகிறது. அசாமிய கலாச்சாரத்தைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு முதலில் அதன் வரலாற்றை ஆராய்வது அவசியம். அசாம் எவ்வாறு பல்வேறு இனக்குழுக்களின் தாயகமாக மாறியது? அசாம் மாநிலத்தில் வசிக்கும் பல்வேறு இனக்குழு கலாச்சாரங்களின் ஒருங்கிணைப்பு அதன் விளைவாக எவ்வாறு ஒரு கூட்டு கலாச்சாரம் உருவாகியது? என வடகிழக்கு இந்திய மாநிலங்களில் ஒன்றான அசாமில் வாழும் இனக்குழுக்களின் வரலாற்றுப் பின்புலத்தையும் அவர்களின் பன்முக கலாச்சாரத்தையும் பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.*

***முக்கிய வார்த்தை:*** *அசாமிய மக்கள் வரலாறு, அசாம் மாநில இனக்குழுக்கள், கலாச்சாரம், வாழ்வியல்.*

## அறிமுகம்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில், அசாமின் மலைகளில் வாழ்ந்தவர்கள் நீக்ரிடோஸ் (Negritos). இவர்கள் தென்கிழக்கு ஆசியாவையும் அந்தமான் தீவையும் சேர்ந்தவர்கள். அசாமுக்கு இடம் பெயர்ந்த அடுத்த இனம் ஆஸ்ட்ராலாய்டுகள் (Australoids). கி.மு. 3000ஆம் ஆண்டிலேயே வெவ்வேறு இனத்தவர்கள் முதன்முதலில் அசாமுக்கு இடம்பெயர்ந்தனர். ராமாயணம் மற்றும் மகாபாரதக் காலத்தில் அசாம் கம்ரூபா என்று அழைக்கப்பட்டது. இதன் தலைநகர் பிரக்ஜோதிஸ்பூர்[1]. (P N Dutta, The Glimpse into History of Assam, P.1) குருஷேத்திரப் போரில் அப்போதைய பிரக்ஜோதிஸ்பூரின் அரசனாக இருந்த பாகதத்தன் தீவிரமாகப் பங்கேற்றதாகச் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய காவியமான மகாபாரதம் கிறிஸ்துவின் வருகைக்கு முன்பே எழுதப்பட்டது. உண்மையில், புகழ்பெற்ற மன்னன் பாகதத்தன் ஆட்சிக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வெவ்வேறு இனக் குழுக்கள் முதன்முதலில் அசாமில் நுழைந்தன. அசாமின் ஆரம்பகால ஆட்சியாளர்கள் தானவ வம்சத்தைச் (Danava Dynasty) சேர்ந்தவர்கள். இந்த வம்சத்தில் முதன்மையானவர் மிஹிரங்க தானவா. அஹோம்களின் (Ahom) வருகைக்கு முன், நரகாசுரன், பாகதத்தன், பாஸ்கரவர்மன் முதலானோர் சிறந்த ஆட்சியாளர்களாக இருந்தனர்.[2] (Edward Gait, A history of Assam, P.22)

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல இனக்குழுக்கள் அசாமிற்கு இடம்பெயர்வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று வர்த்தகமாக இருக்கலாம். கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அசாம் வழியாக ஒரு சர்வதேசப் பாதை இருந்திருக்க வேண்டும். வடகிழக்கு இந்தியாவின் சொர்க்கம் என்று அடிக்கடி குறிப்பிடப்படும் இந்த மாநிலம் இயற்கை அழகு நிரம்பியது. பழங்காலத்திலிருந்தே அசாம் அறுவடைக்கு ஏற்ற வளமான சமவெளிகளைக் கொண்டிருந்தது. கனிம வளங்கள், தாவரங்கள், விலங்கினங்கள், மலைகள், சமவெளிகள், பசுமையான காடுகள் இயற்கையால் அசாமுக்குப் பரிசளிக்கப்பட்டவை. இந்த காரணங்களால்தான் அசாம் வணிக நடவடிக்கைகளின் மையமாக மாறியிருக்க வேண்டும்.

## அசாம் மாநில இனக்குழுக்கள்

அசாம் பல்வேறு இன, மத மொழி சமூகங்களின் கலவையைக் கொண்டது. அசாமின் வரலாற்றை உற்று நோக்கினால், இந்த மாநிலம் ஆஸ்ட்ராலாய்டுகள், மங்கோலியர்கள், ஆரியர்கள் என மூன்று பெரும் இனக் கலவையைக் கண்டுள்ளது. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையே ஒரு வகையான இணைப்புப் பாலமாகச் செயல்பட்டது. இன்றும் செயல்படுகிறது. வெவ்வேறு திசைகளில் இருந்து பல்வேறு குழுக்கள் அசாமில் நுழைந்தனர். மேற்கு திசையில் இருந்து ஆரியர்களும் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து மங்கோலியர்களும் வந்தனர். இந்த அனைத்து குழுக்களின் தனித்துவமான இணைவு ஒரு புதிய கலப்புக் கலாச்சாரத்திற்கு வழிவகுத்தது. அதுவே இப்போது அசாமிஸ் என்று அழைக்கப்படுகிறது.

புவியியல் ரீதியாக அசாம் மாநிலத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, பராக் பள்ளத்தாக்கு, கர்பி-அங்லாங் மற்றும் வடக்கு கச்சார் மலைப்பகுதி. அசாமின் ஆரம்பக் கால குடிமக்கள் அநேகமாக ஆஸ்ட்ரிக் இனத்தவர்கள். அவை “புரோட்டோ - ஆஸ்ட்ராலாய்டு” என்று அழைக்கப் படுகின்றனர். இவர்கள் ஆஸ்திரேலிய மற்றும் பசிபிக் பெருங்கடலின் வேறு சில தீவுகளிலிருந்து ஆசியாவின் நிலப்பகுதிக்கு இடம்பெயர்ந்ததாக நம்பப்படுவதால் அவர்கள் அவ்வாறு அழைக்கப்பட்டனர். காசிகளும் (Khasi) ஜைந்தியாக்களும் (Jaintia) பண்டைய அசாமின் புரோட்டோ - ஆஸ்ட்ராலாய்டுகளின் வழித் தோன்றல்கள். இவர்கள் தற்போது மேகாலயாவில் வசிக்கின்றனர். புரோட்டோ- ஆஸ்ட்ராலாய்டுகளில் திராவிடர்களும் அடங்குவர். இது பற்றி கருத்துவேறுபாடுகளும் உண்டு[3]. (https: //en. wikipedia. org/ wiki/ Australo & Melanesian)

அசாமுக்குக் குடிபெயர்ந்த மங்கோலாய்டுகள் முதலில் கிழக்கு யூரேசியாவிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது, அங்கிருந்து அவர்கள் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தனர். தற்போது இந்திய அரசியலமைப்பின்படி “பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்” என வகைப்படுத்தப்பட்டுள்ள மங்கோலாய்டு மக்களில் பொடோ, கச்சாரி, தியோரி, ரபா, சோனோவால் கச்சாரி, திவா, மிஸிங், கர்பி, திமாசா, காரோ போன்றவர்கள் அடங்குவர். பின்னர், அஹோம்கள் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பட்காய் மலைத்தொடரைக் கடந்து பர்மாவிலிருந்து வந்தனர். அவர்கள் தாய் (Thai) அல்லது ஷான் (Shan) குழுவைச் சேர்ந்தவர்கள்.

திபெத்தோ-பர்மன் குழுவின் அசல் தாயகம் வடமேற்கு சீனாவில் யாங்சே (Yangtse) மற்றும் ஹுவாங் (Huang). பின்னர் அவர்கள் வடகிழக்கு மியான்மர் பகுதிக்கு குடிபெயர்ந்தனர். அங்கு அவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு தெற்கே தென்கிழக்கு ஆசியா வரை சென்றது. சிலர் மேற்கு நோக்கிப் பயணித்து வடகிழக்கு இந்தியாவில் குடியேறினர். இரண்டாவது

குழு இமயமலை அடிவாரத்தில் மேற்கு நோக்கி நகர்ந்து பூட்டான், திபெத் மற்றும் நேபாளத்தை வந்தடைந்தது. அங்கிருந்து சிலர் தெற்கு நோக்கி நகர்ந்து வடகிழக்குக் கணவாய்கள் வழியாக அசாமில் நுழைந்தனர். அவர்கள் அசாமின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர். இவர்கள் தான் பொடோ, கச்சாரி, ரபா, திவா, திமாசா போன்ற அசாமிய பழங்குடியினரின் மூதாதையர்கள் என்று நம்பப்படுகிறது.

## பொடோ (Bodo)

அசாமின் பொடோ அல்லது கச்சாரி பழங்குடியினர் மாநிலம் முழுவதும் பரவி உள்ளனர். இந்த மக்கள் முன்பு பொடோ கச்சாரி என்று அழைக்கப்பட்டனர், ஆனால் இப்போது அவர்கள் பொடோ என்று அழைக்கப்படுகிறார்கள். பொடோக்கள், அசாமிய மக்கள் தொகையில் ஒரு முக்கிய அங்கத்தினர். தற்போது அவர்கள் கோக்ரஜார் மாவட்டம், பிரிக்கப்படாத கம்ரூப் மாவட்டத்தின் வடக்குப் பகுதி, தர்ராங் ஆகிய பகுதிகளில் பெருமளவில் வசிக்கின்றனர். பொடோக்கள் அடிப்படையில் விவசாயம் சார்ந்தவர்கள். மூங்கிலைக் கொண்டு கைவினைப் பொருட்கள் செய்வதில் வல்லவர்கள்.

## மிஸிங் (Mising)

மிஸிங் (Mising) மக்கள் முன்பு மிரிஸ் (Miris) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தேமாஜி, லக்கிம்பூர் மற்றும் ஜோர்ஹாட் மாவட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களின் மொழியில் Mi என்பது மனிதன், sing என்பதற்கு நல்ல என்று பொருள். எனவே மிஸிங் என்பது நல்ல மனிதனைக் குறிக்கிறது. மிஸிங் மக்கள் பெரும்பாலோர் தங்கள் மிஸிங் மொழியிலேயே பேசுகின்றனர். தற்போது சிலர் அசாமி மொழி பேசுகின்றனர்[5]. (Jawahar Jyoti Kuli, Mising Sanskriti, P.28)

## ரபா (Rabha)

ரபா இனத்தவர்கள் சமவெளிப் பழங்குடியினர். அவர்கள் கோல்பாரா, கம்ரூப், தர்ராங் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர். ரபா மக்கள் பல துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளனர். அவையாவன, பாத்தி, ரங்தானி, மைதோ. பாத்திரபாமக்கள் அசாமிய மொழியின் கம்ரூபி வட்டார பேச்சுவழக்கைப் பேசுகிறார்கள், அதே சமயம் ரங்தானிகள் ரங்தானி ரபா என்று அழைக்கப்படும் ரபா மொழியைப் பேசுகிறார்கள் 6. (Upen Rabha Hakacham, Rabha Loka Sanskrti, P.8)

## திமாசா (Dimasa)

திமாசா கச்சாரி என்பவர்கள் வடக்கு கச்சார் மலை (North Cachar Hills District) மாவட்டத்தில் வசிக்கின்றனர். அவர்களின் தாய்மொழி திமாசா-கச்சாரி. சோனோவால் கச்சாரிகள் லக்கிம்பூர், திப்ருகர், தெமாஜி, சிவசாகர், ஜோர்ஹாட் மாவட்டங்களில் வசிக்கின்றனர். அஹோம் ஆட்சியாளர்களால் சுபான்ஸ்ரீ ஆற்றின் மணலைப் பிரித்து தங்கத் துகள்களைச் சேகரிக்கும் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அஹோம் மன்னர்களின் ஆட்சியின் போது அவர்கள் தங்க ஆபரணங்கள் போன்றவற்றைச் செய்ததாகவும் கூறப்படுகிறது, இதனால் இவர்கள் சோனோவால் (Sonowal) என்று அழைக்கப்பட்டனர்.

## திவா (Tiwa)

திவா மக்கள் மங்கோலாய்ட் இனத்தைச் சேர்ந்த ஆசியர்கள். மொழிரீதியாகவும் சமூகரீதியாகவும் அவர்கள் பொடோ குழுவைச் சேர்ந்தவர்கள். திவாக்கள் லாலுங் என்றும் அழைக்கப்படுகின்றனர் அவர்கள் முக்கியமாக நகாவுன், மோரிகான் மாவட்டங்களில் வாழ்கின்றனர். கர்பி அங்லாங் மாவட்டத்தின் சில பகுதிகளிலும், காம்ரூப் மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியிலும், வடக்கு லக்கிம்பூரின் கிழக்குப் பகுதியிலும் திவா மக்கள் வாழ்கின்றனர். மலைவாசி திவா அல்லது மலைவாசி லாலுங் எனப்படும் பிரிவினரும் உள்ளனர்.

**தியோரி (Deori)**

தியோரிமக்கள்அருணாச்சலப்பிரதேசத்தின் சுபான்ஸ்ரீ ஆற்றின் கரையில் ஆரம்பத்தில் வசித்தனர். தற்போது இந்த சிறிய இனக்குழு லக்கிம்பூர், தின்சுகியா, சிவசாகர் மற்றும் ஜோர்ஹாட் மாவட்டங்களில் வசிக்கின்றனர். திபாங்கியா, போர்கோனியா, தெங்கபானி என்பது தியோரி மக்களின் உட்பிரிவாகும். இவர்கள் மங்கோலாய்டு இனத்தவர். பாரம்பரியத்தை விரும்பும் இம்மக்கள் மிகவும் துணிச்சலானவர்கள். விவசாயம் இவர்களது அடிப்படை வாழ்வியல். பொதுவாக கூட்டுக் குடும்பங்களில் வாழும் இவர்கள் அமைதியிலும்நல்லிணக்கத்திலும்நம்பிக்கை கொண்டவர்கள்.

**கர்பி (Karbi)**

அசாமில் அதிக எண்ணிகையில் மலையில் வாழும் மக்கள் கர்பி இனத்தவர்கள். இவர்கள் சீனாவின் மேற்குப் பகுதியிலிருந்து அசாமில் நுழைந்தவர்கள். சிலர் அவர்களை மிகிர்கள் என்றும் அழைக்கின்றார்கள். ஆனால் அவர்களின் சொந்த பேச்சுவழக்கில் அவர்கள்தங்களைஅர்லெங் ‘மனிதன்’ என்று அழைக்கிறார்கள். மொழியியல் ரீதியாக கர்பிகள் திபெட்டோ-பர்மன் குழுவைச் சேர்ந்தவர்கள் இன ரீதியாக மங்கோலாய்டு குழுவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முக்கியமாக கர்பி அங்லாங் மாவட்டத்தில் வாழ்கின்றனர். அவர்களில் சிலர் வடக்கு கச்சார் மலைகளில் ஒரு கிராமத் தலைவரைக்கொண்ட சிறிய கிராமங்களிலும் வாழ்கின்றானர்.

**அஹோம் (Ahom)**

அசாமைப் பற்றிப் பேசும்போது அஹோம்களைப் (Ahoms) பற்றிக் குறிப்பிடுவது அவசியம். அஹோம்கள் மியான்மரில் உள்ள இர்ரவாடி (Irrawady) பகுதியில் ஷான் இனத்தின் “மாவ்’ பழங்குடியினர் குழுவிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில், சுமார் கி.பி 1228 வாக்கில் பட்காய் மலைத்தொடரைக் கடந்து, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிற்குள் தங்களின் தனித்த கலாச்சாரத்துடன் நுழைந்தனர். பள்ளத்தாக்கு வளமானதாகவும் அழகாகவும் இருப்பதைக் கண்டு அதை தங்கதோட்டங்கள் நிறைந்த நாடு (Mong & Dun & Shun & Kham) அதாவது தங்கநிறத்தில் நெல் வயல்கள் நிறைந்த நாடு என்று அழைத்தனர். பின்னர் அங்கேயே தங்கி நிர்வாக அமைப்பையும் ஏற்படுத்திக்கொண்டனர். இவர்களின் ஆட்சி நிர்வாகம் கிபி 1228 முதல் கிபி 1819 வரை அசாமை ஆங்கிலேயர் கைப்பற்றும் வரை சுமார் 600 ஆண்டுகள் நீடித்தது. சுகபா மன்னர் அஹோம்களின் முதல் ஆட்சியாளர். அவரது திறமையான தலைமையின் கீழ் அஹோம்கள் படிப்படியாக ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தினர். (L. A. Waddell, The Tribes of the Brahmaputra Valley, P.17)

சுகபாவின் மறைவுக்குப் பிறகு பல அஹோம் மன்னர்கள் அசாமை ஆட்சி செய்தனர். அவர்களில், சுஹுங்முங் மன்னரின் ஆட்சி அவர்களின் அறுநூறு ஆண்டுகால புகழ்பெற்ற ஆட்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது. 1671 ஆம் ஆண்டில், அஹோம்களுக்கும் முகலாயர்களுக்கும் இடையே ஒரு கடுமையான போர் நடந்தது. லசித் பெர்புகன் என்ற படைத்தளபதின் தலைமையில் நடந்த இந்த போர் “சராய்காட் போர்” என்று அழைக்கப்படுகிறது, இதில் முகலாயர்கள் படுதோல்வியைத் தழுவினர். அவர்களின் புகழ்பெற்ற ஆட்சிக்கு முற்றுபுள்ளி வைத்தவர்கள் ஆங்கிலேயர்கள்.

அஹோம்கள் தங்களுக்கெனெ சொந்த மொழி, மதம், கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியனவற்றைக் கொண்டிருந்தனர். இருப்பினும், அஹோம் ஆட்சியாளர்கள் இந்து மதம், இஸ்லாம், பௌத்தம் மற்றும் பழங்குடி வழிபாட்டு முறைகள் அனைத்தையும் சகிப்புத் தன்மையுடன் கையாண்டனர். அஹோம்களின் காலத்தில்,சமூகங்களுக்கிடையில்

மதக் கலவரங்கள் எதுவும் இல்லை. முதலில் அஹோம்கள் திபெத்தோ-பர்மன் மொழிகளைப் பேசினர், பின்னர் படிப்படியாக அவர்கள் தங்கள் மொழியைக் கைவிட்டு அசாமிய மொழியைத் தங்கள் சொந்த மொழியாக ஏற்றுக்கொண்டனர்.

### அசாமின் பன்முகக் கலாச்சாரம்

அசாம் மாநிலம் பல இன சமூகங்களின் கூட்டுக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. அஸ்ஸாம் மக்களிடையே மூன்று தனித்துவமான கலாச்சாரப் பண்புகளை அவதானிக்கலாம். அவை வேத அல்லது இந்துக் கலாச்சாரம், திபெத்தோ-பர்மன் அல்லது பழங்குடிக் கலாச்சாரம், தாய் அல்லது அஹோம் கலாச்சாரம். அசாமிய மக்களின் கலாச்சாரப் பின்னணி கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முந்தையது. முதல் கலாச்சார ஒருங்கிணைப்பு ஆஸ்ட்ரோ-ஆசியாடிக் மற்றும் திபெத்தோ -பர்மனை மக்களுடன் நடைபெற்றது[8]. (S T. Das, Tribal of North Eastern India: Habit, Economy, Customs, Traditions, P.1)

அசாமில் அதிக எண்ணிக்கையிலான பழங்குடியினர் உள்ளனர். ஒவ்வொரு பழங்குடியினரும் அவர்களின் பாரம்பரியம், கலாச்சாரம், உடை, வாழ்வியல் முறை ஆகியனவற்றைக் கொண்டுள்ளனர். மாநிலத்தின் முதன்மை மொழியாக அசாமி இருந்தாலும் பெரும்பாலான பழங்குடியினர் தங்கள் சொந்த மொழிகளைப் பேசுகின்றனர். அசாமின் கலாச்சாரம் ஒரு கலப்பினக் கலாச்சாரம்.

அசாமி மாநிலத்தில் இருக்கும் பல்வேறு இனங்கள் மற்றும் குழுக்களால் பல பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அசாமின் வளமான கலாச்சாரப் பாரம்பரியம் பல்வேறு பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், சடங்குகள், பழக்கவழக்கங்களின் வெளிப்பாடாக உள்ளது.

### அசாம் மாநில விழாக்கள் மற்றும் பண்டிகைகள்

அசாமின் முக்கிய பண்டிகையான பிஹு, போகலி பிஹு, ரங்காலி/போஹாக் பிஹு மற்றும் கங்காலி பிஹு என வருடத்திற்கு மூன்று முறை கொண்டாடப்படுகிறது. போஹாக் பிஹு பல பழங்குடியினரால் அவர்களின் சொந்த பாரம்பரிய பாணியில் கொண்டாபபடுகிறது. பிஹு, பொடோ மக்களால் பைசாகு என்றும், ரபா மக்களால் பைக்கு அல்லது கோக்சி என்றும், திவா மக்களால் பிசு என்றும், தியோரி மக்களால் போஹாகியோ பிஹு என்றும் கொண்டாடப்படுகிறது.

“பைசாகு” பொடோ கச்சாரிகளால் கொண்டாடப்படும் மிகவும் வண்ணமயமான திருவிழா. இது ஒரு வசந்த விழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த திருவிழாவுடன் தொடர்புடைய நடன வடிவம் பைசாகு நடனம் ஆகும். இதில் எந்தவொரு நபரும் பால், வயது வேறுபாடின்றி பங்கேற்கலாம். இதேபோல் தியோரி மக்களின் போஹாகியோ பிஹுவும் ஒரு வசந்த விழாவாகும். வண்ணமயமான தியோதானி நடனம் இதனுடன் தொடர்புடையது9. (Papeen Narrji, Poro&kaccarir Hamaj Aru Sannskriti, P.30)

மீ-டாம்-மீ-ஃபை, அலி-ஆயி-லிகாங், கெராய், ரோங்கர், ஹச்சாங், லாங்குன் போன்ற பிற பண்டிகைகளும் அசாமின் பழங்குடியினரால் அனுசரிக்கப்படுகின்றன. இவ்விழாக்கள் பல்வேறுச் சமூகங்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கின்றது.

அலி-ஆயி-லிகாங் என்பது மிஸிங் பழங்குடியினரின் விவசாய அடிப்படையிலான வசந்த விழா. குன்முர் போலோ மாதத்தின் பிப்ரவரி - மார்ச் முதல் புதன்கிழமை தொடங்கும் இப்பண்டிகை சுமார் ஐந்து நாட்கள் நீடிக்கும். இந்த திருவிழாவில் முக்கிய கவனம் பெறுவது கும்ராக் நடனம். இதில் இளம் சிறுவர்கள் மற்றும் பெண்கள்

மிகுந்த ஆர்வத்துடன் நடனமாடுவர். ரொங்கர் புத்தாண்டின் தொடக்கத்தில் கர்பி மக்களால் வசந்த விழாவாகக் கொண்டாடப் படுகிறது. லாங்குன் திவா மக்களால் மூங்கிலை வணங்கும் விழாவாக கொண்டாடப்படுகிறது. தை-அஹோம் சமூகத்தால் கொண்டாடப்படும் மீ-டாம்-மீ-பை உண்மையில் ஒரு மரணச் சடங்கு "நினைவு தின அனுசரிப்பு". இதில் அஹோம் சமூகத்தினர் தங்கள் மூதாதையர்களை ஆண்டுதோறும் ஜனவரி 31 ஆம் தேதி வழிபடுகின்றனர்.

பல்வேறு இன-கலாச்சாரக் குழுக்களால் கொண்டாடப்படும் வண்ணமயமான இப்பண்டிகைகள் ஒற்றுமைக்கு வழிவகுக்கின்றன. பழங்காலத்திலிருந்தே அசாம் கிராமப்புற அடிப்படையிலான வாழ்வியலைக் கொண்டது. பாஸ்கரவர்மா காலத்திலிருந்து பிற பிரபலமான ஆட்சியாளர்களின் நாட்களில் கூட அசாமில் மிகக் குறைவான நகரங்களே இருந்தன. கிட்டத்தட்ட 90% நிலப்பரப்பு கிராமங்களால் சூழப்பட்டிருந்தது. 80% மக்கள் விவசாயத்தை நம்பியிருந்தனர். எனவே அசாமிய கலாச்சாரம் விவசாயத்தை மையமாகக் கொண்டது.

### அசாமியர்களின் வாழ்வியல்

பதினைந்தாம் நூற்றாண்டு அசாமிய சமூகத்தின் இருண்ட கட்டம். இந்த காலகட்டத்தில் கலை மற்றும் கலாச்சாரம் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது, சமூகம் பொருள் இன்பத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தது. மத நடைமுறைகள்கூட சிதைக்கப்பட்டன. அப்போது மஹாபுருஷ ஸ்ரீமந்த சங்கரதேவா அவதரித்தார். ஸ்ரீமந்த சங்கரதேவா மற்றும் அவரின் நவ-வைஷ்ண இயக்கத்தின் பங்களிப்பைக் குறிப்பிடாமல் அசாமின் கலாச்சாரம் மற்றும் மக்கள் பற்றி விவாதிக்க முடியாது. மகாபுருஷ சங்கர தேவாவை அசாமில் இடைக்கால மறுமலர்ச்சியின் முன்னோடி என்று கூறலாம். அவர் உண்மையில் ஒரு சிறந்த சமூக-மத சீர்திருத்தவாதி. அசாமிய சமூகத்தினரிடையே முற்போக்கான கண்ணோட்டத்தை வளர்த்தவர். ஜாதி, மதம், இனம், ஆகியனவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் வரவேற்கும் 'நாம்கர்', 'சத்ரா' என்ற நிறுவனங்களை சங்கரதேவா உருவாக்கினார்[9]. (R.D. Choudhury, Some Aspects of History and Culture of Assam, P.237) இதனால் அசாமியரில் பெரும்பான்மையானவர்கள் தற்போது வைணவர்கள். இவர்கள் சிலை வழிபாட்டை நம்புவதில்லை.

பணிவு, இணக்கம், கட்டுப்பாடு, பரோபகாரம் மற்றும் அகிம்சை போன்ற குணத்தை சங்கரதேவா பாராட்டினார். ஏராளமான மதப் பாடல்களைக்கொண்ட "கீர்த்தன்-கோசா" என்ற புனித நூலை அவர் இயற்றினார். "கீர்த்தன்கோசா" என்பது அவரது மகத்தான படைப்பாகும். இது கிருஷ்ணரின் மகிமையை எடுத்துக்காட்டும் பாடல்களின் தொகுப்பு. சடங்குகளைக்கடைபிடிக்காமல் பகவான் கிருஷ்ணரிடம் பூரண சரணடைவதே மனிதனின் மிகப்பெரிய பாக்கியம் என்று அவர் உணர்த்தினார். இவ்வாறு சங்கரதேவா "கீர்த்தன்" அல்லது "நாம்பிரசங்கா" எனப்படும் சபை பிரார்த்தனைகளை வலியுறுத்தினார். இது நாடக நிகழ்ச்சிகளுடன் பாடல்களைப் பாடுவது. ஸ்ரீமந்த சங்கரதேவா பக்தியை அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் கருவியாக அசாமில் மாற்றக் காரணமாக இருந்தார்.

சங்கரதேவா "சத்ரா" என்ற சத்திரங்கள் அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தார். "சத்திரங்கள்" மூலம் தான், கடவுளுக்குச் செய்யும் சேவை மனித குலத்துக்குச் செய்யும் சேவை என்ற கொள்கையைப் பரப்பினார். இந்த சத்திரங்கள் கலை மற்றும் கலாச் சாரத்தைத் வளர்க்கும் மையங்களாக மாறியது. பக்தியைத் தூண்டும் ஒரு நாடக வடிவமான "பாவ்னா"க்களை சத்திரங்களில் நிகழ்த்திக் காட்டினார். சத்ராக்களில் பாடப்பட்ட "பார்கீத்" சிறந்த இலக்கிய மதிப்பைக் கொண்ட பக்திப் பாடல்களாக இருந்தன.

சங்கரதேவா, 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'சத்ரியா நடனத்தை' அறிமுகப்படுத்தினார். இந்த அழகான நடன வடிவத்தை தனது "அங்கிய பாவ்னா" வைணவ அரங்கில் அறிமுகப்படுத்தினார். முதலில் இந்த நடன வடிவம் வைணவ சத்திரத்தில் மட்டுமே நிகழ்த்தப்பட்டது. பின்னர் பொது வெளிக்கு வந்தது. தற்போது 'சத்ரியா நடனம்' அசாமியர்களின் செவ்வியல் நடனமாக உள்ளது.

சங்கர்தேவாவால் புகுத்தப்பட்ட நவ-வைணவ இயக்கம் அசாமில் இலக்கிய மறுமலர்ச்சியைக்யைக் கொண்டு வந்தது. இசை, நடனம், ஓவியம் போன்ற நுண் கலைகளும் மக்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியானது. 18-19 ஆம் நூற்றாண்டுகளில் நடந்த ஆங்கிலேயரின் வருகை, பர்மிய போர் அதன் விளைவான "யந்தோபோ உடன் படிக்கை" ஆகியன பிரிட்டிஷ் செல்வாக்கை மாநிலத்திற்குள் கொண்டு வந்தது. ஆங்கிலேயர்களின் வருகையுடன் மேற்கூறிய இந்தப் பாரம்பரிய கலாச்சாரத்தில் மாற்றங்களும் உருவாகத் தொடங்கியது.

## தொகுப்புரை

அசாமின் வரலாற்றைப் பார்க்கும்போது மாநிலம் அலை அலையான குடியேற்றத்தினைக் கண்டுள்ளது. இது இன்றளவும் தொடர்கிறது. இதனால் அசாம் பல்வேறு இனக்குழுக்களின் தாயகமாக உள்ளது. தற்போது பொடோ, மிஸிங், ரபா, திமாசா, தியோரி, கர்பி என பல இனக்குழுவினர் பெருமளவில் வசிக்கின்றனர். இருப்பினும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் அசாமியர்கள். இவர்களின் முக்கிய விழாவாக "பிஹூ பண்டிகை" உள்ளது. இது விதைப்பு, பராமரிப்பு, அறுவடை என வேளாண்மையோடு தொடர்புடையதாக உள்ளது. ஒவ்வொரு இனக்குழுவினரும் தனித்தனிப் பெயர்களில் இவ்விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அசாமியர்களின் வாழ்வியலில் சங்கர தேவாவின் தோற்றம் பெருமாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. இவர் உருவாக்கிய நவ-வைணவ இயக்கம் நிறுவனமயப்பட்ட வழிபாட்டிற்கு வழிகோலியதைக் காண முடிகிறது. அசாமில் உள்ள இனக்குழுக்கள் தங்களுக்கெனதனித்த மொழி, கலாச்சாரத்தைக் கொண்டுள்ள போதிலும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாக உள்ளனர். இதுவே வட கிழக்கு இந்தியாவின் வளர்ச்சிக்குத் தற்போதைய தேவையாகவும் உள்ளது.

## பார்வை நூல்கள்


1. சௌத்ரி ஆர்.டி. *அசாம் வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் சில அம்சங்கள்*, அசாம் வெளியீட்டு வாரியம், 2012.
2. தாஸ் எஸ் டி., வடகிழக்கு இந்தியப் பழங்குடியினர்: பழக்கவழக்கம் பொருளாதாரம் மற்றும் மரபுகள், டெல்லி, ஜியான் வெளியீட்டு நிறுவனம், 1986.
3. தத்தா பி. என். அசாம்: ஒரு வரலாற்றுப் பார்வை, குவகாத்தி, பீனா நூலக வெளியீடு, 2006.
4. எட்வர்ட் கெய்ட். அசாம் வரலாறு, குவகாத்தி, இ.பிளச் பதிப்பகம், 2018.
5. ஜவஹர் ஜோதி குலி. மிசிங் கலாச்சாரம், திப்ருகார், கஸ்ஸ்தூரிபா பதிப்பகம், 2003.
6. பாபீன் நர்ஜி. *பொடோ-கச்சாரி: சமூகமும் கலாச்சாரமும்*, குவகாத்தி, மீனா நூலக வெளியீடு, 2001.
7. உபேன் ரபா ஹகசம், *ரபா மக்கள் கலாச்சாரம்*, வாரியம், அசாம் வெளியீட்டு, 2001.
8. வாடெல் எல். ஏ., *பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு பழங்குடியினர்*, டெல்லி, சன்ஸ்கரன் பதிப்பகம், 1975.